Chenkaantal
A Bi-Yearly Peer-Reviewed Tamil Journal

Volume - 2, Special Issue - 1, October 2022 E-ISSN: 2583-0481

# Velaramamoorthi Through the Myth of Karisal Localities

**J. Mary Josina,** Part Time M.Phil, Kodaikanal Mother Theresa University, Tamilnadu, India
**Dr. J. Arunadevi,** Assistant Professor, Kunthavai Natchiyar Govt Arts College For Women (Autonomous), Affilaiated With Bharathitasan University, Tiruchirappalli, Tamilnadu, India.
**ORCiD: https://orcid.org/0000-0001-9923-105X**
**DOI: 10.5281/zenodo.7312957**

## Abstract

*Literature is a vast area that has various aspects, forms and elements. Among these elements, novels move on to their next level using the term "space". Authors express the experiences of human life through artistic and fictional literature. Literature is created like a mirror that reflects society. Within the classification of Sanga literature, Bhakti literature, Neeti literature, and literature of this age, the category of regional literature is significant nowadays. In Tamil literature, the area corresponding to the climate of the earth and the nature of the soil is called Vataram. Local literature is created based on the culture, economy, beliefs, profession, food, religious beliefs, language etc. of the people of a particular place. In this article, J.Mary Josina in her part-time research has briefly explained how spaces are divided based on locality and also the novels selected for this research belong to the karisal region through the aspect of Vela Ramamoorthy through the myth of karisal locality.*

**Keywords:** Velaramamoorthi, Myth, Karisal, Locality.

## References

[1] *Vebders Agarathi,* Lexico Krabo November, Print 1961
[2] Shanmugasundaram Su, *Tamilil Vattara Navalgal*, Kavya Publishers, Print 1991
[3] Perumal Murugan, *Kongu Vattara Sollakarathi*, Kuruthu, Print 2000
[4] Sivasubramaniam A, *Inavaraivalum Tamilnavalum*, Parisal, Print 2009
[5] Ramasamy A, *Kathaivelimanithargal,* Nattrinai, Print 2016
[6] Tiruvalluvar, *Thirukkural*
[7] Velaramamoorthy, *Kutrapparamparai,* Discovery Book Palace, Print 2015
[8] Ramasamy A, *Thisaikalum Velikalum*, New Century Book House, Print 2009

**Author Contribution Statement:** NIL.
**Author Acknowledgement:** NIL.
**Author Declaration:** I declare that there is no competing interest in the content and authorship of this scholarly work.

The content of the article is licensed under https://creativecommons.org/licenses/by/4.0/ International License.

செங்காந்தள்
அறிஞர்களால் மதிப்பீடு செய்யப்படும் தமிழ் ஆய்விதழ்



மலர் - 2, சிறப்பிதழ் 1, ஐப்பசி 2053 இ - ஐ எஸ் எஸ் எண்: 2583-0481

# வேல.ராமமூர்த்தி புனைவின் ஊடாக கரிசல் வட்டார வெளிகள்

**ஜா. மேரி ஜோசினா,** பகுதி நேர ஆய்வியல் நிறைஞர்,
கொடைக்கானல் அன்னைதெரசா பல்கலைக்கழகம், தமிழ்நாடு, இந்தியா
**முனைவர் ஜோ. அருணாதேவி,** உதவிப்பேராசிரியர்,
குந்தவை நாச்சியார் அரசினர் மகளிர் கலைக்கல்லூரி (தன்னாட்சி), தஞ்சாவூர்,
திருச்சிராப்பள்ளி பாரதிதாசன் பல்கலைக்கழகத்துடன் இணைக்கப்பட்டுள்ளது, தமிழ்நாடு, இந்தியா.
ORCiD: https://orcid.org/0000-0001-9923-105X
DOI: 10.5281/zenodo.7312957

**ஆய்வுச்சுருக்கம்**

*இலக்கியம் என்பதில் பல்வேறு கூறுகள் இருந்தாலும் அதில் “வெளி“ என்பதை மையமாகக் கொண்டே புனைகதைகள் நகர்ந்து செல்கின்றன மனித வாழ்வின் அனுபவங்களை கலைநயத்தோடும், புனைவோடும் இலக்கியங்கள் மூலம் படைப்பாளர்கள் எடுத்துக் கூறுகின்றனர். சமுதாயத்தை பிரதிபலிக்கும் கண்ணாடி போல் இலக்கியங்கள் படைக்கப்படுகின்றன. சங்க இலக்கியம், பக்தி இலக்கியம், நீதி இலக்கியம், இக்கால இலக்கியம் என்ற வகைப்பாட்டிற்குள் தற்காலத்தில் வட்டார இலக்கியம் என்ற பிரிவு குறிப்பிடத்தக்கது. தமிழ் இலக்கிய பரப்பில் புவியின் தட்பவெப்பநிலையிலும், மண்ணின் தன்மையாலும் ஒத்திருக்கும் பகுதியை வட்டாரம் என்கிறோம். ஓர் குறிப்பிட்ட இடம் சார்ந்த மக்களின் பண்பாடு, பொருளாதாரம், நம்பிக்கைகள், தொழில், உணவு, சமயநம்பிக்கைகள், மொழி போன்றவற்றை அடிப்படையாய் கொண்டு வட்டார இலக்கியங்கள் படைக்கப்படுகின்றன. வட்டார இலக்கியம் என்பதில் கரிசல் வட்டார கூறுகள் வேல. ராமமூர்த்தியின் புனைகளில் வெளிப்படும் தன்மையை ஆராய்வதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.*

**குறிப்புச் சொற்கள்**: வேல.ராமமூர்த்தி, இலக்கியம், வெளி, கரிசல்

**முன்னுரை**

மனித வாழ்வின் அனுபவங்களை கலைநயத்தோடும், புனைவோடும் இலக்கியங்கள் மூலம் படைப்பாளர்கள் எடுத்துக்கூறுகின்றனர். சமுதாயத்தை பிரதிபலிக்கும் கண்ணாடி போல் இலக்கியங்கள் படைக்கப்படுகின்றன. சங்க இலக்கியம், பக்தி இலக்கியம், நீதி இலக்கியம், இக்கால இலக்கியம் என்ற வகைப்பாட்டிற்குள் தற்காலத்தில் வட்டார இலக்கியம் என்ற பிரிவு குறிப்பிடத்தக்கது. தமிழ் இலக்கிய பரப்பில் புவியின் தட்பவெப்பநிலையிலும், மண்ணின் தன்மையாலும் ஒத்திருக்கும் பகுதியை வட்டாரம் என்கிறோம். ஓர் குறிப்பிட்ட இடம் சார்ந்த மக்களின் பண்பாடு, பொருளாதாரம், நம்பிக்கைகள், தொழில், உணவு, சமயநம்பிக்கைகள்,

மொழி போன்றவற்றை அடிப்படையாய் கொண்டு வட்டார இலக்கியங்கள் படைக்கப்படுகின்றன. வட்டார இலக்கியம் என்பதில் கரிசல் வட்டார கூறுகள் வேல.ராமமூர்த்தியின் புனைகளில் வெளிப்படும் தன்மையை ஆராய்வதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

**வட்டாரம்**

நாட்டின் நிர்வாக வசதிக்காக அரசாங்கம் நிலப்பகுதியை வட்டாரம் என்று பிரித்தாலும் எழுத்தாளர்கள் இலக்கிய பரப்பின் அடிப்படையில் வட்டாரம் என்று பிரித்துள்ளனர். அவ்வட்டாரத்திற்கான வரையறையை காணலாம்.

> **வட்டாரம் என்ற சொல்லுக்கு வரலாறு, பண்பாடு, பொருளாதாரம், சமுதாயம் ஆகிய பல கூறுகளிலும் ஒருமித்த உணர்வுடைய மக்கள் வாழும் பரந்த நிலப்பரப்பு**

என்று வெப்டர்ஸ் அகராதி விளக்கம் கூறியுள்ளது.

> **மொழி வாரி மாநிலம் பிரிக்கப்பட்டது போலவே மொழி பேசும் எல்லைக்குள்ளே ஒரு குறிப்பிட்ட பொருளியல், கருத்தியல், பொதுவாக காணப்படும் பகுதியை வட்டாரம் எனலாம்**

என்கிறார் சு.சண்முகசுந்தரம்.

> **இயற்கை அமைப்புகளால் நாடு பல பகுதிகளாக பிரிக்கபட்டிருக்கின்றது. அப்பிரிவுகள் அரசாட்சியாலும் அமைவதுண்டு அல்லது அரசாட்சியால் நிலைப்படுத்தபடுவதுண்டு. ஆனால் இயற்கை அமைப்பே பிரதானம் நிலத்தின் தன்மை, நீர்நிலைகள், வாழிடங்கள் ஆகியவற்றை பொறுத்து வேளாண்மை, தொழில்கள், வாழ்நிலைகள் அமைகின்றன. இப்படிப்பட்ட பகுதியை வட்டாரம் என்கிறோம்**

என்கிறார் பெருமாள்முருகன்.

பல இன மக்கள் வாழ்ந்தாலும் அம்மக்களிடையே ஒரு பொதுதன்மை இழையோடும் ஒற்றுமை கூறுகள் காணப்படும். இப்பண்புகளுடன் மக்கள் தங்களுக்குள் ஒருவரையொருவர் சார்ந்து ஒன்றுபட்டு வாழும் பகுதியே வட்டாரம் என்கின்றனர், பல சாதி மக்கள் ஒரே வட்டாரத்தில் இருந்தாலும் அவர்களிடையே அம்மண்ணிற்கே உரிய ஒரு பொதுவான தன்மை இருக்கும். ஒரேமொழி பேசும் மாநிலமாக இருந்தாலும், மாவட்டமாக இருந்தாலும் மொழி, பொருளியல் கருத்தியல் அடிப்படையில் திறனாய்வாளர் இலக்கியங்களை குறிப்பிட்ட வட்டார அடிப்படையில் இனம் பிரித்து காண்கின்றனர்.

**வட்டார இலக்கியம்**

"குறிப்பிட்ட வட்டாரத்தின் பருண்மையான பிரச்சனைகள், நிகழ்ச்சிகள் ஆகியவை பற்றியும் இவற்றை சந்திக்கின்ற அல்லது இவற்றை உருவாக்குகின்ற மனிதர்களை பற்றியும் வெளியிடுதலே வட்டார இலக்கியங்கள்" என்கிறார் மங்கையர்க்கரசி.

> **காவேரிகரை, கொங்கு பகுதி, கரிசல் பகுதி, கடற்கரை பகுதி, மலைபகுதி என ஒன்றுக்கொன்று முரண்பாடான நிலப்பகுதிகளிலும், சாதிய மற்றும்**

**தொழிலடிப்படையிலான சமூகப்பிரிவுகளும் தமிழ்நாட்டில் உள்ளன. இப்பகுதிகளில் வாழும் மக்களின் வாழ்வை மையமாக கொண்டெழும் நாவல்களை வட்டார நாவல்கள் என்றழைப்பது ஒரு மரபாகியுள்ளது**

என்கிறார் ஆ.சிவசுப்பிரமணியன். இந்த கருத்துக்களை நோக்கும் பொழுது இடத்திற்கும் அந்த இடத்தில் பிறந்து வாழ்ந்து கொண்டிருக்கும் மனிதர்களுக்கும் இடையே உள்ள, உறவிற்கும் அதிக முக்கியத்துவம் கொடுத்து உருவாக்கப்படுவது வட்டார இலக்கியம் என்றும், ஒரு இடத்தில் வாழும் மக்களின் சிந்தனை, செயல்பாடு, உணவு, பண்பாடு, பழக்கவழக்கங்கள், நம்பிக்கை, தொழில் உணவு, மண்ணின் தட்பவெப்பநிலை போன்றவற்றை கூறும் இலக்கியங்கள் வட்டார இலக்கியங்கள் என அறிய முடிகிறது. கதைக்களத்திற்கு அதிக முக்கியத்துவம் கொடுத்து அம்மக்களின் அனுபவங்களான இன்பத்தையும் துன்பத்தையும் எதார்த்த நிலையில் உள்ளதை உள்ளவாறு அனுபவபூர்வமான உணர்வோடு வெளிப்படுத்துவது வட்டார இலக்கியம். இவ்வட்டார இலக்கியத்தை அம்மண்ணில் பிறந்து வளர்ந்து, மக்களின் பிரச்சனைகள் இன்பம், துன்பம் போன்றவற்றை அனுபவித்து வாழ்ந்தவர்கள் மட்டுமே உணர்வுபூர்வமான வட்டார இலக்கியங்கள் படைக்கின்றனர் என்றும் அவ்விலக்கியங்களில் கதைகளத்திற்கும் மக்களின் வாழ்க்கை முறைக்கும் அதிக முக்கியத்துவம் கொடுக்கின்றனர் என்பது புலனாகிறது.

**வெளி**

புனைவில் வெளி என்பது இடம் சார்ந்த பரப்பாக மட்டும் இருப்பதில்லை. இடத்தை சார்ந்த சூழலின் பரப்பையும் மனிதர்களின் மனநிலை சார்ந்த நினைவுகளை கொண்டு வெளி இயங்குகிறது. வெளி என்ற சொல் பல பொருண்மைகளை கொண்டுள்ளது. மக்கள் வாழ்கின்ற இடம், மனிதர்களிடையேயான பேச்சு, விளைநிலம், வீதிகள் ஒவ்வொருவரையும் சுற்றியுள்ள கண்ணுக்கு புலனாகின்ற சுற்றுவெளி போன்றவற்றை உள்ளடக்கியது. “நாவலில் இடம் மிகமிக முக்கியம். இடமாவது கதை நிகழும் களம் களமே யார் என்ன நடந்தது என்பதை புரிந்து கொள்ள உதவுகிறது. இடப்பின்னணி தெளிவாக அமையாத போது கதை சிறப்பதில்லை. கதை நிகழும் களம் தெளிவுற காட்டப்படும்போது நாமும் அங்கேயே வாழ்ந்தது போன்ற பிரம்மை நமக்கு உண்டாகிறது. பூகோள ரீதியான பின்னணிக்கு அதிக முக்கியத்துவம் கொடுத்தால் அது வட்டார நாவலாகிவிடும்” என்கிறார் மா.ராமலிங்கம்.

**நிஜம் என நம்ப வைப்பதில் காலத்திற்கும் பாத்திரங்களுக்கும் புனைவு தன்மையை ஊட்டும் கதாசிரியன் வெளியை யதார்த்தமாக காட்டிடவே விரும்புகிறார். அந்த வகையில் கதையின் முக்கிய கூறுகளான காலம், இடம், பாத்திரம் என்ற மூன்றில் இடம் எனப்படும் வெளியை வெளியை முதன்மையானது என சொல்லலாம் தமிழில் எழுதப்பட்ட கதைகள் அவற்றை எழுதிய ஆசிரியர்கள் குறிப்பான வெளிகளை உருவாக்கி தருவதில் அதிகம் கவனம் செலுத்திடவே செய்துள்ளன. நவீன கதைகளாக இருப்பதன் காரணங்களாக மற்றவர்கள் எதனை நினைக்கிறார்களோ தெரியவில்லை.**

**எனக்கு நவீன கதை என்பது வெளி மற்றும் பாத்திரங்களை விவரித்துக் காட்டும் எழுத்து துறையில் தான் இருக்கிறது என்பதாகவே தோன்றுகிறது**

என்கிறார் அ.ராமசாமி. படைப்புகளுக்கு மையகருத்து, கதாபாத்திரம், மொழி ஆகியவற்றோடு கதைக்களம் என்ற வெளியும் முக்கியமானது என புலனாகிறது. படைப்பாளர்கள் படைப்புகளை உருவாக்கும் போது காலம் எந்த அளவிற்கு முக்கியத்துவம் பெறுகிறதோ அதைப்போல் கதை சிரிப்பதற்கும், வாசகர்களின் ஆர்வத்தைத் தூண்டி அக்களத்தில் வாழ்வது போல் எண்ணம் உண்டாக்குவதற்கு கதைக்களமாக கருதப்படும் வெளி முக்கிய பங்கு வகிக்கிறது. வட்டார இலக்கியங்களில் முதன்மையாக திகழ்கிறது என்பது நமக்கு தெளிவாகிறது.

**கரிசல் வட்டாரம்**

கரிசல் என்ற சொல்லுக்கு “கறுப்பு நிறம் கொண்ட மானாவாரி புஞ்சை பிரதேசம்” என கொள்ளலாம் கறுப்பு நிறம் கொண்ட தன்மையின் அடிப்படையில் கரிசல் வட்டாரம் என பெயர் பெற்றது என்று கரிசல் வட்டாரத்தின் முன்னோடி கி.ராஜநாராயணன் கூறியுள்ளார். கரிசலின் எல்லையானது ஒரு இடத்தை மையமாகக் கொண்டிருக்கிறது. 1910-ம் ஆண்டு கரிசல் நிலவியல் முழுவதும் திருநெல்வேலி மாவட்டத்தில் ஒரு பகுதியாக இருந்தது. அதன்பின் ராமநாதபுரம் மாவட்டத்துடன் சில பகுதிகள் இணைக்கப்பட்டன. மேலும் தூத்துக்குடி மாவட்டம் உருவாகி கரிசல் வட்டார மையமாக விளங்குகிறது. கரிசல் வட்டாரம் என்பது ராமநாதபுரம், மானாமதுரை, இளையான்குடி, பரமக்குடி, பசும்பொன், சூரங்குடி, தூத்துக்குடி, உருளைகுடி, பருவக்குடி, இருக்கன்குடி, எட்டையாபுரம், ஓட்டப்பிடாரம், மணியாச்சி, கயத்தாறு, கோவில்பட்டி, இடைச்செவல், சங்கரன்கோவில், ராஜபாளையம், விருதுநகர், சிவகாசி, சாத்தூர், திருமங்கலம், அருப்புகோட்டை என பல ஊர்களையும் அவ்ஊர்களுக்கு இடையே உள்ள கிராமங்களையும் உள்ளடக்கியது. வடதென் எல்லையாக திருமங்கலம் முதல் கங்கைகொண்டான் வரையிலும் மேற்குகிழக்கு எல்லையாக ராசபாளையம், சங்கரன்கோவில் முதல் ராமநாதபுரம் வரையிலும் கரிசல் வட்டாரம் அமைந்துள்ளது.

**வேளாண்மை வெளி**

மனிதனின் அடிப்படை தேவைகளில் முதன்மை தேவையான உணவு தேவையை நிறைவேற்றியது வேளாண்மை. திருவள்ளுவர் வேளாண்மையின் சிறப்பை பற்றி பின்வருமாறு கூறியுள்ளார்.

**சுழன்றும் ஏர்பின்னது, உலகம் அதனால்**
**உழந்தும் உழவை தலை (குறள். 1031)**

உலகத்தார் பிற தொழில்களை செய்து திரிரதாலும் உணவின் பொருட்டு உழவரையே எதிர்பார்ப்பர். ஆகையால் வருந்த உழைத்தாலும் உழவை தலையாய தொழில் என்று திருவள்ளுவர் கூறியுள்ளார்.

> **பெருநாழி உழவு கட்டிகளை மிதித்து நொறுக்கி கொண்டு உள்ள போகும் வேயன்னாவை பின் தொடர்ந்தபடி சனம் நடந்தது (ப.130)**

தமது நிலத்தில் பயிரிட உழுது தயார்நிலையில் வைத்திருந்தனர் என்பது தெரியவருகிறது.

**வாழிட வெளி**

"கிராமம் என்பது எளிமை, அறியாமை, அப்பாவிதனம், அமைதி, பழமையான மரபு என்பவற்றோடு இணைந்தே காணப்படுகிறது. குறைந்த மக்கள் தொகை, சாதிக் கட்டுப்பாடு, வரம்புகள், சச்சரவுகள், நாட்டுப்புற சிறு தெய்வங்கள், குறைந்த அளவிலான போக்குவரத்து என்பவை கிராமங்களை அடையாளங்காட்டுவன" என்கிறார் தி.சு.நடராஜன்.

> **மனித வாழ்க்கைக்கு பயன்படும் வெளிகள் பல்வேறுவிதமான அவற்றை நிரந்தரவெளிகள், தற்காலிக வெளிகள் என்று பிரிக்கலாம். ஒரு மனித உயிரின் நிரந்தவெளியின் மிகச்சிறிய குடியிருப்பு குடும்பம். குடும்பம் என்ற சமூக நிறுவனத்தின் நிரந்தர வெளியே இல்லம். இல்லம் தனிநபருடைய இருப்பிடமன்று. குடும்ப வாழ்தலின் அடையாளம். இல்லங்களால் உருவாக்கப்படுவது தெருக்கள். தெருக்களால் உருவாக்கப்படுவது ஊர் அல்லது நகரம். ஊர் மற்றும் நகரங்களை கொண்டது மாநிலம். மாநிலங்களின் தொகுதியான நாடு என ஒவ்வொன்றும் பண்பாட்டு வெளியாக விரிகின்றன (திசைகளும் வெளிகளும்)**

என்கிறார் அ.ராமசாமி. இவ்விருவரின் கூற்றுபடி கிராமம் என்ற அமைப்பில் சிறுதெய்வங்களுக்குச் சாதி என்ற பிரிவிற்கும் அதிக முக்கியத்துவம் கொடுத்து மக்கள் வாழ்ந்தனர் என்று புலனாகிறது.

**தொழில்வெளி**

மனிதன் அன்றாடம் வாழ்வதற்கான போராட்டம் தவிர்க்க முடியாதது. அத்தகைய போராட்டத்தை ஏராளமான வழிகளில் வெல்ல வேண்டி உள்ளது. அதற்காக ஒவ்வொருவருக்கும் தொழில் என்பது அவசியமாகிறது. அத்தகைய தொழில் என்பது ஒவ்வொரு இடத்திற்கும் ஏற்ப வேறுபடுகிறது. மண் சார்ந்து பல்வேறு வடிவிலான தொழில்கள் உள்ளன. அத்தகைய தொழில்கள் நடைபெறும் இடங்களே "தொழில்வெளி" எனப்படுகிறது.

**முடிவுரை**

தமிழ் இலக்கிய பரப்பில் புவியின் தட்பவெப்பநிலையிலும், மண்ணின் தன்மையாலும் ஒத்திருக்கும் பகுதியை வட்டாரம் என்கிறோம். குறிப்பிட்ட பகுதியில் வசிக்கின்ற மக்களின் பண்பாடு பழக்கவழக்கம், சடங்குமுறை, சமயநம்பிக்கை என அனைத்தும் அந்தந்த இடப்பின்னணியோடு தொடர்புபடுத்திய வட்டார இலக்கியங்கள் படைக்கப்படுகின்றன எனலாம். அவ்வகையில் வேலராமமூர்த்தி புனைவின் ஊடாக கரிசல் வட்டார வெளிகள் என்ற தலைப்பில் கீழ் வேளாண்மை வெளி, வாழிடவெளி, தொழில்வெளி என வெளிகளை பிரித்து ஆய்வு செய்யப்பட்டுள்ளது.

**துணைநூற்பட்டியல்**

[1] *வெப்டர்ஸ் அகராதி*, லெக்சிகோ கிராபா நோவெப்டர், பதிப்பு 1961.

[2] சண்முகசுந்தரம் சு, *தமிழில் வட்டார நாவல்கள்*, காவ்யா பதிப்பகம், பதிப்பு1991.

[3] பெருமாள் முருகன், *கொங்கு வட்டார சொல்லகராதி*, குருத்து, பதிப்பு 2000.

[4] சிவசுப்பிரமணியம் ஆ, *இனவரைவியலும் தமிழ்நாவலும்*, பரிசல், பதிப்பு 2009.

[5] ராமசாமி அ, *கதைவெளி மனிதர்கள்*, நற்றிணை, பதிப்பு 2016.

[6] திருவள்ளுவர், *திருக்குறள்*.

[7] வேலராமமூர்த்தி, *குற்றப்பரம்பரை*, டிஸ்கவரி புக்பேலஸ், பதிப்பு 2015.

[8] ராமசாமி அ, *திசைகளும் வெளிகளும்*, நியூ செஞ்சுரி புக் ஹவுஸ், பதிப்பு 2009.

**நிதிசார் கட்டுரையாளர் உறுதிமொழி:** இல்லை.

**கட்டுரையாளர் நன்றியுரை:** இல்லை.

**கட்டுரையாளர் உறுதிமொழி:** இக்கட்டுரையில் எவ்வித முரண்பாடும் இல்லை.

இக்கட்டுரை கிரியேட்டிவ் காமன்சு ஆட்ரிபியூசன் 4.0வின் https://creativecommons.org/licenses/by/4.0/ கீழ் பன்னாட்டு உரிமம் பெற்றுள்ளது.